**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**
\- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC **.No. 90/2021**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW4
Defendant :
Court :

Name : கண்ணன் – சிறப்பு சார்பு ஆய்வாளர்
Father's Name : ராமு
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

14.08.2026. **CC.No.90/2021** அ.சா.4 கண்ணன் – சிறப்பு சார்பு ஆய்வாளர்

(எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**முதல் விசாரணை:**

1) நான் தற்போது திருப்புவனம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள் சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் மற்றும் காவல் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் ஆகியோர்களை எனக்கு தெரியும். சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் மற்றும் காவல் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் ஆகியோர்கள் பணி மாறுதல் பெற்று தற்போது வேறு மாவட்டத்தில் பணி செய்து வருவதால் வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு அவர்களுக்காக என்னை கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி சாட்சியம் அளிக்கிறேன். மேலும் இந்த வழக்கு ஆவணங்களை நான் பராமரித்து வரும் வகையில் அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும்.

2) கடந்த 10.07.2019ஆம் தேதி காலை 08.30 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்பவர் திருப்புவனம் காவல் நிலைய

R. VENKADESH PRASANTH
Digitally signed by R. VENKADESH PRASANTH
Date: 2026.08.14 14:47:52 +0530

நிலையபொறுப்பிலிருந்தபோது பாட்டம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் மகள் பாண்டியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 247/2019 பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ்முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **மேற்படி அவர் கொடுத்த புகார் மனு அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர், மானாமதுரை நீதிமன்றத்திற்கும், பிறநகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

3) அதன் பின்பு இவ்வழக்கினை சார்பு ஆய்வாளர் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே நாள் காலை 09.30 மணிக்கு சாட்சிகள் பிச்சைமணி மற்றும் முத்துப்பாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு சாட்சிகள் பாண்டியம்மாள், கிரி, வீரக்குமார், சின்னப்பாண்டியம்மாள் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

4) பின்பு அதே நாள் 11.20 மணிக்கு அரசு ராஜாஜி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலான இவ்வழக்கு விபத்தில் காயமடைந்த சுப்பிரமணியன் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்ற இவ்வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 இதசவிலிருந்து 304(A) இதசவாக பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5) அதன் பின்பு 10.07.2019ம் தேதியன்று மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வைத்து 13.00 – 14.00 மணி வரை இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியன் என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கையை தயார் செய்து காவல் ஆய்வாளர் தயார் செய்துள்ளார். **(பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6) அதன் பின்பு இவ்வழக்கு எதிரியை தேடி வந்த நிலையில் 11.07.2019ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் மதுரை – விராதனூர் ரோடு

R. VENKADESH PRASANTH
Digitally signed by R. VENKADESH PRASANTH
Date: 2026.08.14 14:48:00 +0530

பொட்டபாளையம் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

7) அதன் பின்பு இவ்வழக்கினை காவல் ஆய்வாளர் செந்தில்குமார் தனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சுப்பிரமணியன் என்பவரின் இறப்பிற்கான உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தை காவலர் ராஜேஸ்வரன் 1824 மூலம் கொடுத்து அனுப்பியுள்ளார்.

8) பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 20 G 1675 என்ற பதிவெண்கொண்ட டெம்போ டிராவலர் (ஆம்புலன்ஸ்) வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி சிவகங்கை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. மோகனப்பிரியா, அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றுள்ளார். **(மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.8 ஆக எதிரி தரப்பு சம்மதத்துடன் குறியீடு செய்யப்படுகிறது)** மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் விபத்து வாகனத்தின் இயந்திரக்கோளாறினால் விபத்து ஏற்படவில்லை என சான்றுவழங்கியுள்ளார்.

9) விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியன் பிரேதத்தை பரிசோதனை செய்த மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் அருண்பாலன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார் **(பிரேத பரிசோதனை சான்று அ.த.சா.ஆ.9 ஆக எதிரி தரப்பு சம்மதத்துடன் குறியீடு செய்யப்படுகிறது)** பிரேத பரிசோதனை சான்றிதழில் காயம்பட்டவர் அவருக்கு ஏற்பட்ட The deceased would appear to have died of multiple injuries என சான்று வழங்கியுள்ளார்.

10) பின்னர் இவ்வழக்கில் பிரேதத்தை மருத்துவருக்கு அங்க மச்சம் அடையாளம் காட்டிய காவலர் ராஜேஸ்வரன் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 304 (A) இதசவின் கீழ் 29.07.2019–ம் தேதியன்று கணம் நீதித்துறை நடுவர், மானாமதுரை முன்பாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சிறப்பு சார்பு ஆய்வாளர்

R. VENKADESH PRASANTH
Digitally signed by R. VENKADESH PRASANTH
Date: 2026.08.14 14:48:08 +0530

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்துமே வழக்கின் தேவைக்காக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R. VENKADESH PRASANTH

Digitally signed by R. VENKADESH PRASANTH
Date: 2026.08.14 14:48:15 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.